கலைஞர் 100
1924 - 2023

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 05.12.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை – ஜி.கே.என்.எம். மருத்துவமனையுடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU), கோயம்புத்தூர் மற்றும் ஜி. குப்புசாமி நாயுடு மெமோரியல் மருத்துவமனை (GKNM Hospital), கோயம்புத்தூர் இணைந்து வேளாண்மைப் பல்கலைக்கழக பணியாளர் நலன் மற்றும் சுகாதார மேம்பாட்டை வலுப்படுத்தும் முயற்சியாக, பல்கலைக்கழக பணியாளர்களுக்கும், அவர்களின் தகுதி பெற்ற குடும்பத்தினருக்கும் மருத்துவ சேவைகளில் தள்ளுபடி வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை (MoU) மேற்கொண்டது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வாயிலாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பணியாளர்கள், வெளிநோயாளர் ஆலோசனை, உட்புற சிகிச்சை, பரிசோதனை சேவைகள் மற்றும் ஜி.கே.என்.எம். மருத்துவமனை வழங்கும் பிற மருத்துவ வசதிகளை குறைந்த கட்டணத்தில் பெற முடியும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் (பொ) மற்றும் பதிவாளர் முனைவர் இரா. தமிழ்வேந்தன் அவர்கள் இந்த ஒப்பந்தம் பல்கலைக்கழகத்தின் கல்வி, நிர்வாக மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களின் நலன்களை மேம்படுத்தும் தொடர்ச்சியான முயற்சியை பிரதிபலிப்பதாக கூறினார். ஜி.கே.என்.எம். மருத்துவமனையின் தலைமை செயல் அதிகாரி (CEO) மருத்துவர் ரகுபதி வேலுசாமி அவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயல்படுவதில் பெருமிதம் கொள்வதாக தெரிவித்தார்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் முனைவர் இரா. தமிழ்வேந்தன், துணை வேந்தர் (பொ) மற்றும் பதிவாளர் மற்றும் ஜி.கே.என்.எம். மருத்துவமனை சார்பில் தலைமை செயல் அதிகாரி (CEO) மருத்துவர் ரகுபதி வேலுசாமி ஆகியோர் கையெழுத்திட்டனர். மருத்துவ இயக்குநர் (IOP) மருத்துவர் ராகவேந்திரா எம்.எஸ்., தலைமை மார்க்கெட்டிங் அதிகாரி (CMO) திரு. சி. பி. சந்திரசேகரன், திரு. வி. சரவணன், மூத்த நிர்வாக – நிறுவன உறவுகள் மேலும், முனைவர் ஜெ. ராமலிங்கம், முதன்மையர், மாணவர் நல மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மற்றும் பல்கலைக்கழக மருத்துவர் டி. ரம்யா ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**